★ ஜெனரல் கொப்பேகடுவ ஒப்புக்கொள்கிறார்

# புலிகளிடம் போராடும் சாமர்த்தியம் உண்டு

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 3-00

முரசொலி

முரசு 04 ஒலி 148 புதன் 11-07-1990 (ஆனி 27) துலஹஜ் 17

''விடுதலைப் புலிகளுடனான போர் முடிவடையும் போரல்ல. புலிகள் தொடர்ந்தும் போராடுவதற்கான பலம் இன்னமும் அவர்களிடம் உண்டு'' என்று கிழக்குப்பிராந்திய இராணுவத் தளபதி ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ கூறியுள்ளார். இராணுவத்தீர்வு மூலம் தற்போதைய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியாது. அரசியல் தீர்வின் மூலம் தான் இதற்கு முடிவு காண முடியும். விடுதலைப் புலிகளின் ஆட் பலம் குறித்து எனக்குத் தெரியவில்லை எனக்குறிப் பிட்ட ஜெனரல் கொப்பேகடுவ, ஐ. ஆர். ஏ கெரில் லாக்கள் போன்று புலிகளும் நீண்டகால கெரில்லா போர் புரியக்கூடியவர்கள்'' என்றார். ''புலிகள் இரா ணுவத்தை நேருக்கு நேர் நின்று போராடுவதில்லை. கெரில்லா பாணியில்தான் அவர்கள் யுத்தம் இருக் கிறது. எத்தனை காலத்திற்கு வடகிழக்கில் புலிகளின் இப்போராட்டம் நீடிக்கும் என என்னால் கூறமுடியா துள்ளது எனினும் இராணுவம் (4 ஆம் பக்கம் பார்க்க)

★ ஒற்றையாட்சி ஏற்புடையதல்ல; தமிழர் தனித்துவம் பேணப்படாவிடின்

# தமிழீழத் தனியரசு போர் தொடர்வது திண்ணமே

## தமிழீழ விடுதலைப் புலிகள் அறிக்கை

பிரேமதாஸ அரசு தமிழீழ மக்களுக்கு நீதி வழங்க விரும்பினால் சிங்களப் பேரின வாதத்தின் சின்னமாக விளங்கும் ஒற்றையாட்சி யாப்பினை முற்றாக மாற்றியமைக்க முன் வரவேண்டும். தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, பூரண அரசியல் அதிகாரங்களுடைய மாநில சுயாட்சித் திட்டம் ஒன்றை சிங்கள அரசு முன்வைக்குமானால் எமது இயக்கம் அதனைப் பரிசீலனைசெய்யத் தயாராக இருக்கிறது. ஆனால், அதேவேளை எமது மக்களுக்கு எதிராக அரச பயங்கரவாதமும், இன ஒழிப்பு நடவடிக்கைகளும் தொட ருமானால் தமிழீழத் தனியரசை அமைக்கும் தேசிய விடுதலைப் போராட்டத்தை தீவிரமாக் குவதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை.

இவ்வாறு விடுதலைப் புலி கள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்துள்ள அதிகார பூர்வ மான அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''சிங்களப் பேரினவாத அரசு இன்று தமிழீழ மக்கள் மீது ஒரு முழு அளவிலான யுத்தத்தை ஏவி விட்டு இன ப்படுகொலையை தீவிரமாக் கிவருகிறது சிங்கள ஆயுதப் படைகளின் காட்டு மிராண்டி த்தனமான தாக்குதல்களால் ஆயிரக்கணக்கில் அப்பாவி மக்கள் கொலையுண்டு வரு கின்றனர். பல லட்சம் மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாக அல்லல் படுகின் றனர்.

ஒரு புறம் எமது மக்களை அழித்துக் கொண்டு அவர் களை சொந்த மண்ணிலிரு ந்து விரட்டிக்கொண்டு, மறு புறம் மாகாணசபை என்றும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## உரும்பிராயில் இன்று விடுதலை

தமிழீழ விடுதலைப் புலிக ளினால் தடுத்து வைக்கப் பட்டுள்ள இளைஞர்களுள் ஒரு தொகுதியினர் இன்று மாலை 4 மணியளவில் விடு தலை செய்யப்படவுள்ளார் கள்.

உரும்பிராய் விடுதலைப் புலிகள் மக்கள் முன் னணி பிரதேச அலுவலகத் தில் வைத்து விடுவிக்கப்பட வுள்ள இவ் இளைஞர்க ளது பெற்றோர்கள் உறவின ர்கள் இவ் இடத்திற்கு வந்து அவர்களை அழைத்துச் செல்லுமாறு கேட்கப்பட்டுள் ளது. (3)

## யாழ். கோட்டை முகாம் உள்ளே அடகு நகைகள் எதுவும் இல்லை

(எஸ்.ஆர்.எம்)

யாழ்.கோட்டை இராணுவ முகாமினுள்ளே மக்கள் வங் கியின் மீளளிப்பு நகைகள் எது வும் இல்லையென மக்கள் வங்கி வட்டாரங்கள் தெரி விக்கின்றன.

பொதுமக்கள் கோட்டை இராணுவ முகாமினுள்ளே மக்கள் வங்கியின் பெருமளவு அடகுநகைகள் உள்ளதாக கூறிவருகின்றார்கள். இவ்விட யம் பொதுமக்கள் மத்தியில் பரபரப்பையும் ஏற்படுத்தி யிருந்தது இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது;

நகைமீளளிப்புக்காக பணம் செலுத்தியவர்களில் பதின் மூவாயிரம் பேருக்கு இது வரை நகைமீளளிப்பு செய் யப்பட்டுள்ளது. இன்னமும் சுமார் இரண்டாயிரம் பேருக்கு மட்டுமே அடகு

—04 ஆம் பக்கம் பார்க்க

அழுத் பொம்மக்க தெம்மத?

## தமிழர்ஜீவன்'இரை'தேடும் எவ்.எம். உரையாடல்

நேற்று மாலை யாழ்நகர்ப் பகுதியில் குறிப்பாக கோட்டைப் பகுதியில் வானில் வட்டமிட்டு மக்களை பதற்றத்திற்குள்ளாக்கிய ஹெலி - பொம்மர் சமாச் சாரத்தில் பல முக்கிய உரையாடல்களை வானொலி யின் எவ். எம். அலைவரிசையில் தெளிவாகக் கேட் கக் கூடியதாக இருந்தது ஸ்ரீலங்கா அரசின் புதுவகை குண்டுப் பிரயோகம் பற்றியும் இதில் புலனானது அவ் வுரையாடலின் விபரம் வருமாறு: —04 பக்கம் பார்க்க

## பொலநறுவையில் புலிகள் துணிகரத் தாக்குதல்

பொலநறுவைமாவட்டத்தில் உள்ள திருகோணமடு கிராம த்தில் இருந்து சிங்கபுர நோக் கிச் சென்ற ஸ்ரீலங்கா இரா ணுவம் மீது விடுதலைப்புலி கள் தாக்குதல் நடாத்திய தில் 4 இராணுவத்தினர் பலி யாகி யுள்ளதாக விடுதலைப் புலிகளின் செய்திக் குறிப் பொன்று தெரிவிக்கின்றது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்தத் தாக்குதலில் இராணுவத்தினரின் ஜீப்ஒன்று எரிக்கப்பட்டதாகவும் இர ண்டு T— 56 II ரக துப்பாக் கிகளும் T— 81 ரக துப்பாக்கி ஒன்றும் ஒன்பது மகஸின் களும் கைப்பற்றப் பட்டதாக

—04 ஆம் பக்கம் பார்க்க

## பிரேமதாஸ கருத்துப்பற்றி ராஜதந்திரிகள் வியப்பு

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் இனி வெளிநாடு ஏதாவது ஒன்றின் உதவியு டன்தான் நடைபெறும் என ஜனாதிபதி பிரேமதாஸ கூறி ய கருத்துக்குறித்து கொழும் பில் உள்ள வெளிநாட்டு இரா ஜதந்திரிகள் வியப்பு தெரிவித் துள்ளனர்.

ஜனாதிபதியின் இந்தக்கருத் துக் குறித்து தமக்கு ஒன்றும்

—04 ஆம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவில் ஹெலி றொக்கட் தாக்குதல்

நேற்று முல்லைதீவுப்பகுதி யில் உள்ள வற்றாப்பளை 3ம் கட்டை பகுதிகளில் ஸ்ரீலங்கா ஹெலி றொக்கட் மோட்டர் தாக்குதல் நடாத் தியுள்ளது.

இத்தாக்குதல் மக்கள் செறி வாக வாழும் பகுதிகளை நோக்கியே நடாத்தப்பட்டது மக்களது உயிர்ச்சேதம் உட மைகளது சேதம் பற்றிய விப ரங்கள் கிடைக்கவில்லை இவ்வாறு விடுதலைப் புலிக ளின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்...

## தீவைப்பு, கொள்ளையில் ராணுவம் எனப்புகார்

நேற்று மன்னார் மாவட் டத்தில் ஸ்ரீலங்கா இராணு வத்தினர் நூற்றுக் கணக்கான வீடுகளையும், கடைகளையும் எரித்துள்ளதாக விடுதலைப் புலிகளின் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

மேலும் அச்செய்தியில் இருந்து தெரியவருவதாவது:

நேற்று பகல் 11 மணியள வில் முருங்கன் வீதியால் வந்த இலங்கை இராணுவத் தினர் இப்பகுதிகளில் உள்ள 30 கடைகளை எரித்துள்ள னர். கூட்டுறவுச் சங்கக் கடை யொன்றை எரித்து பொருட் களை களவாடியுள்ளனர்.

செம்மண் தீவு வீதியால் வந்த இராணுவத்தினர் ... 11 வீடுகளை

பழந் தமிழர் வீரக் கோலங்கள்
கோலம் : 5

## ஒரு தாயின் தாலாட்டு!

ஊர்ப்பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டு உண்பதற்குப் யிடிவாதம் பிடித்தபோது -நான் ஓங்கிய கோல் கண்டு ஓடிய என் மகனா; மார்பில் தாங்கிய கணையுடனே தாயகத்தை மீட்கும் போரில் தன்னுயிரைத் தருவதற்கும் துணிந்து நின்றான்!

பகைவெல்லச் சென்றிருக்கும் கணவனது
பனைவைர நெஞ்சத்தின் வீரத்தை நினைத்தவாறு

பகல்முழுதும் குடும்பத்துப் பணிமுடித்துச் சற்றுப்
படுத்துறக்கம் கொள்வதற்குச் செல்லும் முன்னர்

பாசமுடன் மகனைக் கூவியழைத்துக் ''கண்ணா!
பாலமுதம் இதோ பருகிட வாடா;'' என்பேன்!

''வரமாட்டேன் போ'' என்று நிலாவெள்ளி
ஒளியினிலே
வட்டமிட்டு விளையாட ஓடிடுவான் எதிர்வீட்டுப்
பிள்ளையுடன்!

வந்துவிடும் எனக்குக் கோபம் — கோலொன்றை
எடுத்தோங்கி
''வரமாட்டேன் என்றா சொன்னாய்? இதோ
வந்து விட்டேன்'' எனத்

துரத்திடுவேன்; அடிக்க மாட்டேன்! ஆனாலும்
என்
தூயமகன் அஞ்சி நடுங்கிப் பதுங்கிடுவான்!

கோலுக்கே இந்தப் பயம் கொள்கின்ற பிள்ளாய்:
நீ — நாளை
வேலுக்குப் போர்முனையில் என்ன பதில்
சொல்வாய் என்பேன்!

இழுத்து வந்து செல்லமாய்க் கன்னம் கிள்ளிப்
பழுத்திருக்கும் கோவைக்கனியாம் அவன் இதழில்;

தேன் கலந்த பாலின் கிண்ணம் மெல்லக் கவிழ்த்து
தெம்பாக இருப்பதற்கு முழுவதையும்
அருந்தென்பேன்!

அழகுதமிழ் மழலைச் செல்வன் அதனை மறுக்காமல்
அச்சத்தின் காரணமாய் அனைத்தும் பருகிடுவான்!

பிறைபோல இருந்த பிள்ளை முழுநிலவாக
உருவெடுத்து
குறையில்லாத் தோற்றமுடன் குன்றம் போல்
வளர்ந்து விட்டான்!

தாலாட்டப் பிள்ளையொன்றைத் தந்துவிட்டுப்
போராட்டக்களம் சென்ற என்னவரோ;

தமிழ் மண்ணின் பண்பாட்டுக் கேற்றவாறு
தட மார்பில் வேல்தாங்கி நடுகல்லாய்
நின்றுவிட்டார்

நானும் கல்லாக மனத்தை ஆக்கிக்கொண்டு
வானதிரப் புவி வாழ்த்துகின்ற மானத்தை

ஊனமின்றிக் காப்பதற்கு உறுதிபூண்டு
உயர் வீரக்குடிமகனாய்ப் பிள்ளைதனை
வளர்த்தேன்!

கட்டியணைத்துக்களித்த என்கணவனது நெஞ்சகத்தை
வெட்டிப்பிளந்து வீழ்த்திவிட்ட பகைப்புலத்தை;
எட்டியுதைத்துத் துரத்தி ஏற்றிடுக வெற்றிக்
கொடி யென்றும்,
எதிரிகளின் கோட்டையிலே நம் முரசு முழங்கட்டு
மென்றும்,

உச்சிமோந்து திலகமிட்டுக் குடுமிதனைக் கோதிவிட்டு
உடைவாளைக் கையில்தந்து, ''சென்றுவா மகனே''
என அனுப்பி வைத்தேன்

அவனோ; ............ (நாளை தொடர்கிறது)

'சங்கத் தமிழ்' நூலிலிருந்து - கலைஞர் கருணாநிதி அவர்கட்கு நன்றியுடன்.

தேர்வு : 'கங்கா'

### இலங்கையில் தமிழர் படுகொலைகளைக் கண்டித்து

# பல வெளிநாடுகளில் எதிர்ப்பு ஊர்வலங்கள்

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதைக் கண்டித்து உலகின் பல பகுதிகளிலுமுள்ள தமிழர் அமைப்புக்கள் மூலம் பெருமளவிலான ஆர்ப்பாட்டங்களை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

தற்பொழுது இலங்கையில் தமிழர்கள் அரசபடைகளினாலும், சிங்களக்காடைகளினாலும் பரவலாகக் கொலை செய்யப்பட்டுவருகின்றார்கள்.

ஆனால் அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கும்- படைகளுக்குமிடையேயான யுத்தமே இங்கு இடம்பெற்றுவருவதாகவும், இந்த மோதலில் தமிழ்மக்கள் பாதிக்கப்படவில்லை எனவும் பிரசாரம் செய்து வருகின்றது.

கொழும்பிலுள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகள் அடிக்கடி பாதுகாப்பு அமைச்சுக்கு அழைக்கப்பட்டு அவர்களுக்கு வடக்கு, கிழக்கு நிலைமை பற்றி உண்மைக்கு முரணான தகவல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேபோன்று வெளிநாடுகளிலுள்ள இலங்கைத்தூதுவராலயங்களும் அந்தநாடுகளிலுள்ள வெகுஜன தொடர்புச்சாதனங்களுக்கு உண்மைக்குப் புறம்பான ஒருபக்கச் சார்பான தகவல்களைக் கொடுத்து வருகின்றன.

இந்த நிலையில் இலங்கையில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதையும், இங்குநிகழும் படையினரின் அட்டூழியங்களையும் வெளிக்கொணர்வதற்கும் வெளிநாடுகளிலுள்ள தமிழ் அமைப்புக்கள் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டு, உலகநாடுகளின் கவனத்தை ஈர்க்கவேண்டியது தற்பொழுது அவசியமாக உள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

லண்டன், பாரிஸ், நியூயோர்க், மற்றும் கனடா, நோர்வே ஆகிய இடங்களில் முதலில் இந்த ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (கி)

## இடமாற்றம்

தற்போது நுணாவிலில் இயங்கிவரும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனை மீண்டும் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் விரைவில் இயங்கவுள்ளது.

இதற்கான கட்டடம் ஒதுக்கப்பட்டு கட்டடத் திருத்த வேலைகள் தென்மராட்சி அரிமா கழகத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
(ப-3கி)

## மருந்துகள் பழுதடையும் நிலை

சாவகச்சேரிப் பகுதியில் அடிக்கடி மின்சாரம் இல்லாததால் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மாவட்ட வைத்தியசாலை ஆகியவற்றில் உள்ள தடுப்பூசி மருந்துகள் பழுதடையக்கூடிய நிலை உருவாகலாமென அஞ்சப்படுகின்றது.

மண்ணெண்ணெயில் இயங்கக்கூடிய குளிர்சாதனப் பெட்டிகள் இருந்தும் எண்ணெய் இல்லாததால் இயக்க முடியவில்லையெனவும் அறியப்படுகிறது.
(ப. 3 கி)

## ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பம்

மாகாணங்களுக்குள்ளும் மாகாணங்களுக்கிடையேயும் இடமாற்றம் பெறவிரும்பும் ஆசியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் இம்மாத முடிவுக்குள் மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது (கி)

## கணக்காய்வாளர் மகாநாடு

யாழ். மாவட்டக் கூட்டுறவுக் கணக்காய்வு உதவி ஆணையாளர் பிரிவு வெளிக்கள உத்தியோகத்தர் மகாநாடு இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகத்தில் நடைபெறும் எனக் கூட்டுறவு உதவி ஆணையாளர் மா. கனகசபை அறிவித்துள்ளார்.
(68,கி)

### ஜனார்த்தனன் சிங்கிடம் கோரிக்கை

## 'தமிழர் கொலையை நிறுத்த உடன் நடவடிக்கை எடுங்கள்'

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை எடுங்கள்.

இவ்வாறு உலகத்தமிழ் இளைஞர் பேரவைத்தலைவர் டாக்டர் ஜனார்த்தனன் இந்தியப் பிரதமர் வி.பி. சிங்கிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னையிலிருந்து டாக்டர் ஜனார்த்தனன் வி.பி சிங்கிற்கு இது தொடர்பாக அனுப்பிவைத்துள்ள அவசர கடிதத்தில் தாமதமற்ற நடவடிக்கை அவசியம் என வலியுறுத்தியுள்ளார். (கி)

## கால்நடை உணவும் இல்லை; முட்டை, பால் விலை அதிகரிப்பு

கிளிநொச்யில் கால்நடை உணவு இல்லாததால் கால்நடை வளர்ப்போர் பெரும் பாதிப்படைந்து வருகின்றனர்.

நீண்ட நாட்களாக போக்குவரத்துத்தடை ஏற்பட்டதைத் தொடர்ந்து கால்நடை கோழித்தீனி தட்டுப்பாட்டால் பண்ணையாளர்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

இதனால் கோழிமுட்டைக்கும், பாலுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. முட்டையின் விலையும் அதிகரித்து வருகிறது.

அதேவேளை கால்நடை நோய் தடுப்பூசி மருந்துகளும் கால்நடை வைத்தியப்பகுதியினரும் இல்லாததால் கால்நடைகள் அழிந்து போகும் நிலையும் உள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (35-கி)

### நெடுந்தீவு - குறிகாட்டுவான்

## குமுதினி படகுச் சேவை பல நாட்களாகப் பாதிப்பு

(புங்குடுதீவு)

நெடுந்தீவு — குறிகாட்டுவானுக்கான குமுதினி படகுச் சேவைகள் கடந்த பல வாரங்களுக்கு மேலாக தடைப்பட்டுள்ளது,

ஒரு கிழமையில் மூன்று நாட்கள் நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் கிழமையில் ஒரு நாள் மட்டுமே இச்சேவை நடைபெற்று வருகிறது.

இந்த நிலையால் மக்கள் தங்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் பெருந் துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

படகுச் சேவைகள் ஒழுங்கான முறையில் நடைபெறாததினால் அங்கு உணவுத் தட்டுப்பாடும் ஏற்பட்டிருக்கிறது.
(கி)



## கரதீவு - சங்குப்பிட்டி

# கடற்பாதை சேவை நேற்று முதல் நிறுத்தம்

கேரதீவு — சங்குப்பிட்டி கடற்பாதைச் சேவை நேற்று முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் குடாநாட்டுக்கும் பிறபகுதிகளுக்குமிடையேயான தொடர்புகள் முற்றாக ஸ்தம்பிதமடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இராணுவ நெருக்கடி காரணமாக ஆனையிறவு தடைமுகாம் ஊடான பயணத்தைத் தவிர்த்து, பெரும்பாலானோர் கேரதீவு— சங்குப்பிட்டி மார்க்கமாகவே தமது பயணத்தை மேற்கொண்டு வந்தனர்.

நேற்று முன்தினம் மாலை பூநகரிப் பகுதியில் ஹெலிகப்டரிலிருந்து துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டன. இப்பிரசுரங்களில் கேரதீவு — சங்குப்பிட்டி மார்க்கமான வாகனப் போக்குவரத்துக்கள் அனைத்தும் நிறுத்தப்படல் வேண்டும் என கூறப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் கேரதீவு —சங்குப்பிட்டி பாதைசேவை நேற்றுக்காலை முதல் நடைபெறவில்லை.

குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்குச் சென்ற வாகனங்கள் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பின. குடாநாட்டை நோக்கி வந்த வாகனங்கள் இக்கரைக்கு வரமுடியாமல் அக்கரையில் சங்குப்பிட்டியில் நிறுத்தப்பட்டிருந்தன.

இப் பகுதியில் ஆகாயத் தாக்குதல் எந்நேரமும் இடம் பெறலாமென்ற அச்சம் நிலவியதினால் இரு கரைகளுக்குமிடையே சாதாரண படகு சேவைகளும் இடம் பெறவில்லை. (64கி)

## லண்டனில் புலிகள் குற்றச்சாட்டு

# 1400 க்கு மேற்பட்ட அப்பாவித் தமிழர் இலங்கையில் படைகளால் படுகொலை

கடந்த 11-ம் திகதி இலங்கைப்படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே மோதல் ஆரம்பமானதன் பின்னர் 1400 க்கும் மேற்பட்ட தமிழ்ப் பொதுமக்கள் சுட்டும், தீவைத்தும் கொல்லப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் லண்டனில் வெளியிட்ட அறிக்கையில் இவ்விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சிறுபான்மைத் தமிழ்மக்களை இனப்படுகொலை செய்து வருகின்றது.

புலிகளுடன் போரிடுவதாக வெளியுலகுக்கு காட்டிக் கொண்டு இலங்கைப் படைகள் அப்பாவித் தமிழ்மக்களை கொன்றுகுவித்து வருகின்றன.

விமானப்படைகளின் விமானங்கள் பொதுமக்கள் வாழுமிடங்களில் கண்மூடித்தனமாக குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

இதனால் கோடிக்கணக்கில் உடமைகளுக்கு சேதமேற்பட்டுள்ளன.

தமிழரின் பாரம்பரிய பூமிகள் சுடுகாடாக மாறிவருகின்றன.

என லண்டனில் வெளியிடப்பட்ட இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

# வடக்கை நோக்கி அகதிகள் வருகை தொடர்கிறது

(தாளையடி)

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு திருகோணமலையிலிருந்து தொடர்ந்தும் அகதிகள் வந்த வண்ணமுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை நான்கு படகுகளில் சுமார் எண்பது குடும்பங்களும் இன்னும் ஒரு படகில் பத்துக் குடும்பத்தைச் சேர்ந்த முப்பது பேரும்வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் மாமுனை, கட்டைக்காடு அகதிமுகாம்களில் தங்கியுள்ளனர், இவர்களுக்கான உணவு வசதிகளை அவ்வப்பகுதி சிற்றூர் அவையினர் செய்துள்ளனர். (18 கி)

## பொது இடங்களில்

# மாணவர் அமைப்புக்களால் பதுங்கு குழிகள் அமைப்பு

பொதுவான பதுங்குகுழிகள் அமைப்பதில் பல்கலைக் கழக மாணவர்களும், மற்றும் பாடசாலை மாணவர்களும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக யாழ். பல்கலைக் கழக மாணவர்கள், யாழ். பரியோவான் கல்லூரி லியோ கழக மாணவர்கள், பொதுத் தொண்டர் ஸ்தாபனங்கள், தனியார் கல்விக் கழகங்கள் என்பன இவற்றில் ஈடுபட்டு வருகின்றன.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இதுவரை பிரதேசவாரியாக புங்கன்குளம், தபால் கட்டைச் சந்தி, உரும்பிராய், கொக்குவில், முத்திரைச்சந்தி, போன்ற இடங்களிலும் பரியோவானின் லியோ கழகத்தினர் கைலாசபிள்ளையார் கோவில் முன்றலிலும் போர்க்காலப் பதுங்கு குழிகளை அமைத்துள்ளனர். (64 கி)

# முகாம்களில் இருப்போர்க்கு 2 வார உணவுப்பொருள் கிடைக்கும்

(அரியாலை)

அண்மைக்கால அசம்பாவிதங்கள் காரண மாக பிறமாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து ஒவ்வொரு உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் தங்கி வசிப்பவர்களுக்கு 2-வது வாரத்திற்கான உலர் உணவு நியோகம் செய்வதற்கான அனுமதியை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிறட் வழங்கியுள்ளார்.

அதே வேளையில் உள்ளூரிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கான 2-வது வாரத்துக்குரிய உலர் உணவு விநியோகம், ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர்களிடமும் இருந்து கிடைக்கப்பெறும் பட்டியல்கள் சரிபார்க்கப்பட்ட பின்னரே சமூக சேவைப் பிரதிப் பணிப்பாளர் அவர்களினால் அனுமதி வழங்கப்படும் என்று தெரிவிக்கும் கடிதங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தின் 14 உதவி அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உள்ளூரில் இடம் பெயர்ந்தவர்கள் அகதி முகாமில் தங்கியிருந்தால் மாத்திரமே அவர்களுக்கு உலர் நிவாரணம் வழங்கப்படுமென்றும் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருப்பவர்களுக்கு அது வழங்கப்படமாட்டாது என்றும் தெரியவருகிறது. (47 கி)

# ஆனையிறவில் போராளி மரணம்

போராளி ஒருவர் மிதிவெடியில் அகப்பட்டு பலியான சம்பவம் ஆனையிறவில் இடம் பெற்றது.

திலீப் (கண்டாவளை) என்பவரே பலியானவராவார். இவரின் சடலம் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ப. 3கி)

# உங்களுடையதா?

தெல்லிபளையைச் சேர்ந்த நடராசா உதயகுமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆசிரிய பீடத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# போட்டிகள் ஒத்திவைப்பு

யாழ்·மாநகர சனசமூக நிலையங்களின் சமாசத்தால் நடாத்தப்படவிருந்த விளையாட்டுப் போட்டிகளும், கலாசாரப் போட்டிகளும், வடமாகாண ரீதியிலான இசை நாடகப் போட்டிகளும் காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் இம்மாத நடுப்பகுதியில் நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன், விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. நாட்டின் நிலைமை வழமைக்குத் திரும்பியதும், இப்போட்டிகள் யாவும் நடைபெறுமென்று அண்மையில் நடைபெற்ற மேற்படி சமாசத்தின் ஆட்சிக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது (47-கி)

# களம் பல கண்ட யாழ். கோட்டை (4)



யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர் படை

3, பெப்ரவரி 1658

இலங்கையில் போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருன்மிடையில் மூண்ட யுத்தத்தின் விளைவாக றைக்லொவ் வன் ஹூன்ஸ் என்ற ஒல்லாந்த கொமுசாறி (தளபதி) ஒன்பது கப்பல்களோடும், 1500 பேர் கொண்ட படை வீரகுகளோடும் தண்டெடுத்து போர்த்துக்கேயப் படைகளை முறியடித்து மன்னாரைக் கைப்பற்றிக் கொண்டான் பின்னர் மார்ச் மாதத்தில் கரையோரப்பாதை வழியாகப் பூநகரி ஊடாக யாழ்ப்பாணத்திற்கு படை நடத்தி வந்தான். அவனது கப்பல்கள் கடல்மார்க்கமாக யாழ்ப்பாணம் நோக்கி வந்தன.

ஒல்லாந்தப்படைகளை நடத்திவந்த றைக்லொவ் வன் ஹூன்ஸ் என்பானை யாழ்ப்பாணத்து மக்கள் வன்கோயன் எனக் குறிப்பிட்டனர், இன்னும் சிலர் பெரிய ஒல்லாந்தேசு எனக் குறிப்பிட்டனர்.

மார்ச் மாதம் 9ஆந் திகதி ஒல்லாந்துப்படை யாழ்ப்பாணத்திலிருந்த யேசு சபைக் கல்லூரியையும் டொமினிக்கன் சபை ஆலயத்தையும் மடத்தையும் கைப்பற்றிக்கொண்டது. கோட்டைக்கு வெளியில் இருந்த போர்த்துக்கேயர் அனைவரும் ஒல்லாந்தப்படைக்குஅஞ்சியாழ்ப்பாணக்கோட்டைக்குள் புகுந்துகொண்டனர். யாழ்ப்பாணக்கோட்டையை ஒல்லாந்தர் முற்றுகையிட்டனர். அவர்கள் கோட்டையைச் சுற்றி தரைப்புறமாகப் பாசறை அமைத்துக்கொண்டார். யாழ்ப்பாணக் கடலேரிக்குள் பிரவேசித்த ஒல்லாந்தக் கப்பல்கள் கொமுசாறியின் கட்டளைக்காகக் காத்திருந்தன. மார்ச் மாதம் 16-ம் திகதியிலிருந்து ஜூன் மாதம் 21-ம் திகதி வரை ஒல்லாந்தரின் முற்றுகை தொடர்ந்தது.

அவ்வேளை யாழ்ப்பாண நகரம் ஒரு சிறிய பட்டினமாக விருந்தது. சத்திரங்களும் பொதுக்கிணறுகளும் அமைந்திருந்தன. தாழ்ந்த கரைகளைக் கொண்ட கல் கட்டிடங்கள் காணப்பட்டன. மக்களது வீடுகள் விறாந்தைகளையும் தலைவாசல்களையும் கொண்டிருந்தன. வீடுகளின் முன்பக்கம் வீதிப் பக்கமாகவிருக்காது உட்பக்கமாகவிருந்தன. மண் சுவர்களையும் ஓலைக்கூரைகளையும் கொண்ட வீடுகள் அதிகமாகக் காணப்பட்டன.

ஒல்லாந்தர் முற்றுகையிட்டுள்ளனர். பெரும் யுத்தம் நடக்கப்போகிறது என கேள்விப்பட்டதும் வீடுகளுக்கு ஒடுங்கிக் கொண்ட மக்கள் மூன்று நாட்களின் பின்னர் வழமைக்குத் திரும்பிக் கடைத்தெருவுக்கு வரத் தொடங்கினர். எவர் ஆண்டாலென்ன என்ற மனப்போக்கு யாழ்ப்பாண மக்களிடம் இருந்தது.

முற்றவெளியில் முற்றுகையிட்டிருந்த ஒல்லாந்தப் படைகள் இடையிடையே கடைத்தெருவுக்கும் வந்தனர். பாசறைகளில் இருந்த வீரர்கள் பட்டினத்திற்கு வருவதும், வியாபாரிகளிடம் தமக்குத் தேவையான பொருட்களை அள்ளிக் கொள்வதும் பிரச்சினையைத் தோற்றுவித்தது. யாழ்ப்பாண மக்களின் ஆடையணிகள் ஒல்லாந்தருக்கு வியப்பினைத் தந்தன.

வேட்டியை மடி வைத்து பஞ்ச கச்சமாக ஒரு சிலர் கட்டியிருந்தனர். அவர்களில் சிலர் சால்வை தரித்திருந்தனர். வேறு சிலர் அரையில் ஒரு துண்டு மட்டும் கட்டியிருந்தனர். பெண்களில் பெரும்பாலானோர் றவுக்கையணியாது சேலைத்தலைப்பால் மார்புகளை மூடியிருந்தனர். ஒரு பகுதிப் பெண்கள் இடுப்பில் சேலையை மடித்து மட்டும் கட்டியிருந்தனர்.

யாழ்ப்பாணக்கோட்டையை முற்றுகையிட்டும் தாக்காது கொமுசாறி காலம் கடத்தி வருவது வியப்பாக இருந்தது. அவனது திட்டம் வேறாகவிருந்தது. கோட்டைக்குள் புகுந்திருக்கும் ஆயிரம் பேருக்கும் உணவுப் பஞ்சம் ஏற்படும். தண்ணீர்ப்பஞ்சம் ஏற்படும். இருக்கின்ற உணவு முடிந்ததும் அவர்கள் வலுவிழந்து தாக்குதல்களைத் தொடங்குவார்கள். பட்டினி போடுவதுதான் அவர்களைப் பணிய வைக்க அல்லது அழிக்கச் சரியான வழியென கொமுசாறி எண்ணியிருந்தான். அவனது எண்ணம் பொய்க்கவில்லை. கோட்டை கொத்தளங்களில் நின்றிருந்த போர்த்துக்கேயவர்களிடம் அமைதியின்மை, சோர்வு என்பன ஏற்படுவதை அவதானித்தான்.

கோட்டைக்குள் பட்டினி நிலை தோன்றிவிட்டது கோவாவிலிருந்து உதவிகள் வரும் எனப் போர்த்துக்கேயர் எதிர்பார்த்தது பொய்த்துவிட்டது. யாழ்ப்பாணக்கோட்டையின் கிழக்குப்பக்க உயர் கொத்தளத்திலிருந்து முதலாவது பீரங்கி ஒல்லாந்தப்படைவீரர்களை நோக்கி வெடித்தது. அதனைத்தொடாந்து வடக்குப்பக்கக் கொத்தளங்களிலிருந்தும் பீரங்கி சுடப்பட்டது. அகழியைத்தாண்டி பீரங்கிக் குண்டுகள் தீச்சுவாலைகளுடன் ஒல்லாந்தரை நோக்கிப் பாய்ந்தன,

(தொடரும்)

## யாழ். நகரில் இருந்து 12 லொறிகள்
# உணவுப் பொருட்கள் பெற
# மதவாச்சி நோக்கி விரைவு

யாழ் மாவட்டத்திற்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருட்களின் ஒரு பகுதியைப் பெறுவதற்காக இன்று காலை 12பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லொறிகள் மதவாச்சி நோக்கிப் புறப்படு கின்றன எனத் தெரிவிக்கப் படுகிறது.

கொழும்பில் இருந்து இதே நேரம் 12 லொறிகள் உண வுப் பொருட்களுடன் மத வாச்சி நோக்கி புறப்படுகின் றன. இரு பகுதி லொறிக ளும் நாளை காலை மத வாச்சியில் சந்திப்பதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

யாழ். அரசாங்க அதிபரும் வடபகுதிக்கான அத்தியாவ சிய சேவைகள் பணிப்பாள ரும் மேற்கொண்ட முயற்சி யினாலேயே இத்திட்டம் நடைமுறையாகியுள்ளது. யாழ். நகரில் இருந்து செல் லும் லொறிகளில் யாழ், செயலக அதிகாரி ஒருவரும் செல்கின்றார்.

இவர்களுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இரு வாகனங்களும் செல்கின் றன. ஆனையிறவு ஊடாக செல்லும் இந்த லொறிகள் நாளை காலை உணவுப் பொருட்களை ஏற்றி மேற் படி லொறிகள் அன்றைய தினமே யாழ். நகர் திரும்ப வுள்ளன. இவை வெள்ளிக் கிழமை யாழ். வந்து சேரு மென எதிர்பார்க்கப்படுகின் றது.

பரீட்சார்த்தமாக மேற் கொள்ளப்படும் இந்த நடவ டிக்கையில் சீனி, மா போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களும் மருந்து வகைகளும், குழந் தைப் பால் மாக்களும் கொண்டுவரப்படவுள்ளன.

03-06

## அகதிகளுக்கான உணவு
## ஆகக்கூடுதலாக 315 ரூபா

யாழ். மாவட்ட அகதிகளுக் கான இரண்டாம் கிழமை உணவுப் பொருள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதற் கிழமைப் பதிவுகள் யாவும் ஆராயப்பட்டபின் னரே இது வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இண்டாம் கிழமைக்கு ஆகக் கூடுதலாக 315 ரூபா பெறு மதியான உணவுப் பொருட் கள் அகதிகளுக்கு வழங்கப் படவுள்ளன. முதற் கிழமை யில் ஆகக் கூடுதலாக 200 ரூபாவே வழங்கப்பட்டது.

(03)

## போர்க்கால கூட்டம்

சகல மாணவர்களுக்குமான போர்க்கால கலந்துரையா டல் கூட்டம் இன்று மாலை 4மணிக்கு இருபாலை எக்ஸ் பிறஸ் கல்விக் கூடத்தில் நடைபெறவுள்ளது. இதில் சகல மாணவர்களும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் கேட்டுள்ளது.

### தமிழீழ...

தேர்தல் என்றும் போலி நம் பிக்கையூட்டி சிங்கள அரசு எமது மக்களையும் உலகத் தையும் ஏமாற்ற முனைகி றது. இந்த அரசியல் சூழ்ச்சி வலையில் நாம் சிக்கிவிடத் தயாராக இல்லை.

இன்றைய தமிழின அழி ப்பு யுத்தத்தால் எழுந்துள்ள பூதாகரமான பிரச்சினைகளு க்கு மாகாண சபைத் திட்டம் ஒரு தீர்வாக அமையப் போவ தில்லை. ஆகவே, புதிய திரு ப்பமடைந்திருக்கும் இன்றைய வரலாற்று சூழ் நிலையில் மாகாண சபை அமைப்பை நாம் ஏற்றுக்கொள்ள முடி யாது. இன்றைய சூழ் நிலை யில் மாகாண சபைத் தேர் தலில் பங்கு பற்றவும் எமது மக்கள் தயாராக இல்லை''

''மாகாண சபைத்திட்டம் உருவாக்கப்பட்ட காலத்தி லிருந்தே இத்திட்டத்தை விடுதலைப்புலிகள் இயக்கம் எதிர்த்துவந்தது என்பதை எமது மக்கள் அறிவார்கள். இந்தத் திட்டத்தில் எந்த வகையான உருப்படியான சுயாட்சி அதிகாரங்கள் இல் லைஎன்பதால் நாம் அதனை அன்றே நிராகரித்து விட் டோம். தமிழர் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வாக மாகாண சபைத்திட்டம் அமையவில்லை என்பது தான் எமது நிலைப்பாடு.

எனவேதான் முன்னைய இந்திய அரசு இத்திட்டத்தை ஆயுத முனையில் எமது மக்கள் மீது திணிக்க முயன்றபோது நாம் அதனை எதிர்த்தோம். இறுதியில், மாகாண சபை அமைப்பில் இந்திய அரசும் நம்பிக்கை யிழந்தது. தமிழ் பேசும் மக் களின் அரசியல் அபிலாசை களை பூர்த்தி செய்யும் திட் டமாக இது அமைய வில்லையென முந்திய ராஜீவ் அரசு ஒப்புக் கொண்டது.

நாம் பிரேமதாசா அரசு டன் பேச்சுக்கள் நடத்திய போது மாகாண சபை அமைப்பை ஒரு நிரந்தரத் தீர்வாக ஏற்கவில்லை அதனை ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பாக ஏற்று தேர்தலை சந்திக்க முடி வெடுத்தோம்.

ஆயினும், மாகாண சபை யைக் கலைத்து உடன் தேர் தலை நடத்துமாறு நாம் வற்புறுத்தியதுடன் அரசியல் அமைப்பின் ஆறாவது சட் டத் திருத்தமும் நீக்கப்பட வேண்டுமென முன்நிபந்தனை விதித்தோம். ஆனால் அன்று சிங்கள அரசு எமது கோரிக் கைகளை தட்டிக் கழித்து காலம் தாழ்த்தி வந்தது. பேச்சுகள் ஒரு வருடத்திற்கு மேலாக இழுபட்டு வந்தன அன்று நல்லெண்ணமும் சமா தானமும் நிலவிய போது தேர்தலுக்கு சூழ்நிலை சாத கமாக இருக்கவில்லையென பிரேமதாசா நொண்டிச் சாக்கு சொல்லி வந்தார்.

இன்று தமிழீழ மக்களுக்கு எதிராக ஒருமுழு அளவிலான யுத்தத்தை நடத்திக்கொண்டு எமது மக்களை பெருவாரி யாக அழித்துக்கொண்டு, பொருளாதாரத் தடை விதித்து பஞ்சத்தில் ஆழ்த் திக்கொண்டு, லட்சக்கணக் கானோரை அகதிகளாக மாற் றிக்கொண்டு. தேர்தலுக்கு தயாரா என சவால் விடுக் கிறார் பிரேமதாஸ இன்றைய பயங்கரமான சூழ்நிலை தேர் தலுக்கு சாதகமான சுமுக சூழ்நிலை என பிரேமதாஸ கருதுவாரானால் தமிழ் பேசும் மக்களின் நலனில் அவ ருக்கு எத்தகைய அக்கறை இருக்கிறது என்பதை புரிந்து கொள்ளலாம்.

ஒரு புறத்தில் இன அழிப்பு நடவடிக்கைகளை தீவிரமாக் கிக்கொண்டு, மறுபுறத்தில் மாகாணசபைத் தேர்தல் என்று உலகத்தின் கண்களுக்கு மண்தூவ முனையும் பிரேம தாஸவின் கபட நாடகம் குறித்து சர்வதேச சமூகம் விழிப்பாக இருக்குமென நம் புகிறோம்.

இன்று எமது மக்களுக்கு எதிராக ஏவப்பட்டுள்ள யுத் தமும், சிங்கள ஆயுதப்படை களின் கொடூரமான இன ஒழிப்பு நடவடிக்கைகளும் தமிழீழ மக்களுக்கு ஒரு அப் பட்டமான உண்மையை உணர்த்தியிருக்கிறது. அதா வது சிங்கள பேரினவாத வல் லாதிக்கத்தை எமது மக்கள் மீது திணிக்க முயலும் ஸ்ரீலங் காவின் ஒற்றையாட்சி அர சியலமைப்பு திட்டத்தின் கீழ் இனப் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணமுடி யாது என்பதுதான். நாற்பது ஆண்டுகால கசப்பான வர லாற்று அனுபவமும் இந்த உண்மையை எடுத்தியம்பு கிறது.

மாகாண சபைத் திட்ட மானது ஸ்ரீலங்காவின் ஒற்றை யாட்சி யாப்புவின் கட்ட மைப்பின் கீழ் அமைகிறது. ஆகவேதான் இத்திட்டத்தை நாம் ஒரு நிரந்தரத் தீர்வாக ஏற்க மறுத்தோம். இன்று புதிதாகப் பிறந்துள்ள பார தூரமான சூழ்நிலை காரண மாக மாகாணசபைத் திட் டத்தை நாம் ஒரு தற்காலிக தீர்வாகவும் ஏற்கத் தயாராக இல்லை. தமிழீழ மக்களை ஏமாற்றி, தனது வல்லாதிக் கத்தின்கீழ் அடக்கிவைத்திருக் கும் நோக்குடன், சிங்கள அரசு முன்வைக்கும் அரசியல் பொறிகளுக்குள் நாம் ஒரு போதும் சிக்கிவிடப் போவ தில்லை.

(03ஸ்ரீ)


## அறிவித்தல்

புதிய உயர் கல்லூரியின் சகல விரிவுரை யாளர்களையும், ஆசிரியர்களையும், மாணவர் களையும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் 13-07-1990(வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.00 மணிக்கு தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகி

**புதிய உயர் கல்லூரி**
(NEW COLLEGE OF HIGHER STUDIES)
ஆரிய குளம் சந்தி, யாழ்ப்பாணம்.
07007


## உலகளாவிய புலிகள்
## பிரசாரம், இங்கும் கலக்க[ம்]

''விடுதலைப்புலிகள் உல கின் பலபகுதிகளிலும் தம் நிலைப் பாட்டை நியாயப் படுத்திப் பிரசாரம் செய்து வருகின்றனர். எனவே எம் நாட்டு ராஜதந்திரிகளும் இலங்கை அரசின் நடவடிக் கைபற்றி உலக நாடுகளு[க்] குத் தெளிவுபடுத்தியா[க] வேண்டும்.''

இவ்வாறு வெளிநாட்[டு] அமைச்சர் திரு. ஹரல்ட் ஹேரத் கூறியுள்ளார். (ஸ்ரீ)

## தனியார்ஒளிபரப்புநிலையங்கள்மூலம்
# நிதர்சனம் நிகழ்ச்சிகளை யாவரும் பார்க்க முயற்சி

நிதர்சனம் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளைப் தெளி வாகப் பார்க்க முடியாத பகு திகளுக்கு தனியார் ஒளிபர ப்பு நிலையங்கள் மூலம் நிதர்சனம் நிகழ்ச்சிகளை வழங்குவதற்கான நடவடிக் கைகள் எடுக்கப்படுவதாக தெரியவருகின்றது.

நிதர்சனம் நிகழ்ச்சிகளை வீடியோ காட்டில் பதிவு செய்து அவற்றை தனியார் ஒளிபரப்பு நிலையங்கள் மூலம் அவ்வப்பகுதி மக்களு க்கு தெளிவாகப் பார்க்க வழி செய்யப்படவுள்ளதாக மேலும் தெரிய வருகின்றது.

(03)

### தற்போது நடைபெறும்
## அகதிமுகாமுக்கு அரசாங்க அதிபர்

சண்டிலிப்பாய் உதவி அர சாங்க அதிபர் பிரிவில் அமைந் துள்ள அகதிமுகாம்களுக்கு யாழ் அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் நேற்று நேரடி விஜயத்தை மேற் கொண்டார். (03)

### யாழ்.கோட்டை

நகைகள் மீளளிப்பு செய்யப் படவேண்டும்.

இந்த இரண்டாயிரம் பேரி னது நகைகளும் மற்றை யோரது நகைகளும் கொழும் பில் உள்ளன. அவை கோட் டை இராணுவ முகாமுக்கு எடுத்துவரப்படவில்லை. இந்த நகைகளையே பொதுமக்கள் முகாமினுள் உள்ளதாக கூறி வருவதாக தெரியவந்தது.

(03)

### பொலநறுவையில் ..

அச் செய்திக் குறிப்பு மேலும் தெரிவிக்கின்றது.

விடுதலைப் புலிகள் தரப் பில் ஒரு போராளி சிறு காய த்திற்குள்ளாகியுள்ளார். சிங் ளப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இரண் டாவது தாக்குதல் இதுவென ஸ்ரீலங்கா இராணுவ வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கு முன்னர் மதவாச் சியில் விடுதலைப் புலிகள் கண்ணிவெடி வைத்து பல இராணுவத்தினர் கொல் லப்பட்டது தெரிந்ததே.

பொலநறுவ மிகப் பெரும் பாண்மையாக சிங்களவர் வாழும் பிரதேசம் என்பது குறிப்பிடத்தக்கது. (3 ஸ்ரீ)

### புலிகளிடம் ..

புலிகளை அடக்கும் எனத் தாம் நம்புவதாகவும் கொப் பேடுவ குறிப்பிட்டார்.

இராணுவ ரீதியில் பலம் வாய்ந்த விடுதலைப் புலிகள் ஜே. வி. பி யினருடன் ஒப்பி டக்கூடியவர்களல்லர். புலிகளி டம் இராணுவப் பயிற்சியும் மக்கள் ஆதரவும் அதிகம் இருப்பதை கொழும்பில் இரா ணுவ அதிகாரிகள் ஒப்புக் கொண்டதாகவும் ஜே. வி. பி யின் ஒரு உறுப்பினர் மூலம் வரிசையாக பலரை பிடிக்கக் கூடியதாக இருந்தது என அவர்கள் குறிப்பிட்டதாகவும் ஏஜென்சிச் செய்திகள் நேற் றுத்தெரிவித்தன. (து)

### தமிழர்...

முதல் குரல்; (பொலிஸியற்ற ஈய காம தம்மத) பொலி ஸாருக்கு நேற்று உணவு போடப்பட்டதா?

பதில்; (தம்ம) போடப் பட்டது.

கேள்வி;(அத்துலத நத்தங்.) எங்கே உள்ளேயா அல்லது

பதில்; (அத்துல தமாய்) உள்ளேதான் ... (ஹத்தரக் தம்ம) நான்கு பார்சல்கள் தான் போட முடிந்தது.

கேள்வி: (அமுத் பொம்மக்க தாண்டட்ரை கெருவத?) புதிய குண்டைப் போட முயற்சி எடுக்கப்பட்டதா?)

பதில்: (பலமு) பார்க் கிறோம்.

தொடர் குரல்; (ஓனதரங் காண்ட) வேண்டிய அளவுக்கு அடி சம்பாஷனையின் இறு திக்கட்டம்)

We are Going to Anuradha-pura

மூவாயிரம் அடி உயரத்தில் தாம் இருப்பதாகவும் இவ் வுரையாடல் தெரிவித்தது.

### பிரேமதாஸ ..

விளக்கமாக இல்லை என இவர்கள் குறிப்பிட்டனர்.

எனினும் வெளிநாடு என் பது நிச்சயமாக இந்தியாவாக இருக்க முடியாது என்பதே அவர்கள் கருத்து என கொழு ம்புச் செய்திகள் தெரிவிக் கின்றன.

இதேவேளை அரசுக்கும்-புலி களுக்கும் இடையிலான சம ரச முயற்சிக்கு பிரிட்டிஷ் அரசு உதவும் எனவும்எனினும் இது குறித்து அரசு எம்மிடம் எதுவும்தெரிவிக்கவில்லை என வும் பிரிட்டிஷ் தூதுவர் கிளஸ் ரோன் குறிப்பிட்டதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (து-ஸ்ரீ)

### நீவைப்பு...

யும் எரித்துள்ளனர். அம்பாள் வீதியில் உள்ள 17 வீடுகளும் எரிக்கப்பட்டுள்ளன. இப் பகுதிகளில் இருந்த மக்கள் அகதிகளாக இந்தியாவுக்குச் சென்றுள்ளார்கள்.

12-ம் கட்டையில் உள்ள ரீ. ஏ. பத்மநாதன் வீடு முற் றாக எரியூட்டப்பட்டது. அத் துடன் இக்கிராமத்தில் உள்ள வீடுகளின் கதவுகள் உடைக் கப்பட்டு பொருட்கள் கொள் ளையடிக்கப்பட்டுள்ளன.

சுண்டிக்குளிக் கிராமத்தி[ல்] 11 வீடுகள் எரியூட்டப்பட்[டு] மிகுதி வீடுகளில் பொருட்க[ள்] கொள்ளையிடப்பட்டுள்ள[ன].

சிறுகண்டி என்னும் கி[ரா] மத்தில் 5 வீடுகள் எரியூ[ட்] டப்பட்டுள்ளன. மிகுதி வ[ீடு] கள்யாவும் கொள்ளையடி[க்] கப்பட்டுள்ளன. 50ம் கட்டை உயிலங்குளம் பகுதியில் ப[...] என்பவரது லொறிகள் எ[ரி] கப்பட்டது. அதே இடத்தி[ல்] இரண்டு நெற் கடைகளு[ம்] பல வீடுகளும் எரியூட்டப்ப[ட்] டுள்ளன எனத்தெரிவிக்[க]ப் பட்டுள்ளது. 03-

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மி பில்டிங்'கில் ... பெற்றது.